# நமது ஈழநாடு

www.namathueelanadu.com





குரல் 06 மலர் 66 மார்ச் 2026 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com


Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன், ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்

- தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்





# தமிழ் அரசியல் கட்சிகளின் புதிய நகர்வுகளும் வாய்ப்புகளும்



படம் : இணையம்

**தாயகன்**

இலங்கைத் தமிழ் அரசியலில் நீண்டகாலமாக நிலவி வந்த பிளவுகளும், கட்சி ரீதியான முரண்பாடுகளும் தமிழ் மக்கள் மத்தியில் ஒருவித அதிருப்தியை ஏற்படுத்தியிருந்த சூழலில், கடந்த மார்ச் 2ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற தமிழ் அரசியல் கட்சிகளின் சந்திப்பு முக்கிய திருப்புமுனையாகப் பார்க்கப்படுகிறது.

தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பில் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியப் பேரவை மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய மூன்று பிரதான அணிகளும் மேசையில் அமர்ந்தமை ஆரோக்கியமான அரசியல் நகர்வாகும்.

மூடிய அறைக்குள் பலத்த வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நான்கு முக்கிய தீர்மானங்கள் ஒருமித்து எடுக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் மக்களின் இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி முறையிலான புதிய அரசியலமைப்புக்கான சமூக ஒப்பந்த வரைபைத் தயாரித்தல், சமஷ்டியின் அடிப்படை அம்சங்களை உள்ளடக்கிய விரிவான அரசியலமைப்பு வரைபு ஒன்றை உருவாக்குதல், அரசியலமைப்பு விடயங்களில் தமிழ்க் கட்சிகள் ஒருங்கிணைந்து செயற்படுதல் மற்றும் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளின் போது தனித்தனியாகவோ அல்லது கட்சி அடிப்படையிலோ அன்றி, ஒரு கூட்டு நிலைப்பாட்டிலேயே ஈடுபடுதல் என்பவையே அவையாகும்.

இந்தச் சந்திப்பின் போது, நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் முன்வைக்கப்பட்ட 'ஏக்கிய இராச்சிய' அரசியலமைப்பு யோசனை தொடர்பில் எம்.ஏ.சுமந்திரனுக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

முன்னைய அந்த யோசனையைச் சுமந்திரன் பகிரங்கமாக நிராகரிக்க வேண்டும் என கஜேந்திரகுமார் வலியுறுத்தினார். 'ஏக்கிய இராச்சிய' திட்டத்திற்குத் தாம் இணங்கவில்லை என்றும், தமிழ் மக்களுக்கு உரிய அரசியல் தீர்வே தமது இலக்கு என்றும் சுமந்திரன் வாதிட்டார்.

இறுதியில், தற்போதைய சூழலில் சமஷ்டி அடிப்படையிலான புதிய வரைபை நோக்கி நகர்வதே அவசியமென ஏனைய தலைவர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து அந்த விவாதம் தணிந்தது.

முன்னதாக யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்டிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், புதிய அரசியலமைப்புக்கான வரைபைத் தயாரிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளதோடு இதற்கென விசேட நிபுணர் குழு ஒன்றையும் நியமித்துள்ளார். தாயகத்தில் 'தேசிய மக்கள் சக்தி' தனது செல்வாக்கை விஸ்தரித்து வரும் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, தமிழ் தேசியத்தின் இருப்பைப் பாதுகாக்க இத்தகைய ஒருங்கிணைவு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, தமிழ் அரசியலில் இவ்வாறான ஒருங்கிணைவு முயற்சிகள் பலமுறை தோல்வியடைந்துள்ளன. முன்னதாக சுவிஸ் தூதரகத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவிருந்த சந்திப்பு பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு முன்னதாகவே தோல்வி கண்டிருந்தன.

அதேபோல், திருகோணமலைப் பிரகடனம் போன்ற முக்கிய ஆவணங்கள் வெளியான போதிலும், அவை அடிமட்டத்தில் உரிய அரசியல் அழுத்தமாக மாற்றப்படவில்லை.

இம்முறை அத்தகைய தவறுகள் நடக்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவைக்கு உண்டு.

ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவை மற்றும் வடமாகாண சபை வழங்கிய சமஷ்டி வரைபுகள் மூலாதாரங்களாக உள்ளன. குறிப்பாக தமிழ் மக்கள் பேரவையின் வரைபில் சமூக ஒப்பந்தம் மற்றும் சமஷ்டிப் பண்புகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

எனினும், சமஷ்டி என்பது 'கூட்டு அதிகாரமும்' 'சுயாட்சி அதிகாரமும்' இணைந்த ஒரு சமநிலையாகும். இந்த விடயத்தல் சுவிஸ்லாந்து மற்றும் பொஸ்னிய சமஷ்டி முறைகளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் அதிகமுள்ளன.

குறிப்பாக, மத்திய அரசு என்பது 'சிங்கள பௌத்த' கருத்து நிலைகளால் கட்டமைக்கப்பட்ட அரசாக இருக்கும் வரை, எந்த அதிகாரப் பகிர்வும் நடைமுறைக்கு வராது என்பதற்கு சோல்பரி யாப்பின் 29ஆவது பிரிவு முதல் 13ஆவது திருத்தம் வரை சிறந்த உதாரணங்களாகும்.

இந்த புதிய நகர்வில் உள்ள மற்றொரு பெரும் சவால் வடக்கு கிழக்கு இணைப்பு மற்றும் முஸ்லிம் மக்களின் வகிபாகமாகும். 'வடக்கு கிழக்கு' என்பது 'தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகம்' என்ற கோட்பாட்டு அடிப்படையில் இரு சமூகங்களுக்கும் இடையே ஒரு சமூக ஒப்பந்தம் தேவையென முஸ்லிம் புத்திஜீவிகளும் வலியுறுத்தி வருகின்றனர்.

முஸ்லிம் மக்களுடன் உடன்பாட்டிற்குச் செல்வதில் சிக்கல்கள் இருப்பின், நிலத்தொடர்ச்சியற்ற முறையில் தமிழ்ப் பிரதேசங்களை இணைக்கும் மாற்றுவழிகள் குறித்தும் சிந்திக்கலாம்.

எவ்வாறாயினும், சுயாட்சி அதிகாரங்களுக்கான பாதுகாப்பு விடயத்தில் இறுதித் தீர்மானமெடுக்கும் அதிகாரம் தமிழ் மக்களிடமே இருக்க வேண்டும் என்பதில் தமிழ்க் கட்சிகள் உறுதியாக உள்ளன.

அத்துடன், இலங்கையில் அரசுருவாக்கம் என்பது சிங்களபௌத்த மேலாதிக்கத்தை மையமாகக் கொண்டிருப்பதால், அந்த கட்டமைப்பில் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாகப் பங்குபற்றும் பொறிமுறை அவசியம். இந்த பொறிமுறை இல்லாவிட்டால் மத்திய அரசு என்பது எப்போதும் ஒரு தரப்புக்கே சாதகமாக அமையும்.

மேலும், இந்த ஒருங்கிணைந்த குரலானது வெறும் தேர்தல் காலக் கூட்டாக அன்றி, நீண்டகாலக் கொள்கைப் பயணமாக மாற வேண்டும். தமிழ்க் கட்சிகளிடையே நிலவிய ஒருங்கிணைவின்மையால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த அதிருப்தியைப் போக்க இத்தீர்மானங்கள் மருந்தாக அமையக்கூடும்.

இவ்வாறான வரைபுகளைத் தயாரிக்கும்போது, புலமைசார் ரீதியாகவும் தர்க்கரீதியாகவும் அவை சர்வதேசத் தரத்தில் அமைவது முக்கியம்.

குறிப்பாக, தாயகத்தில் உள்ள உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஊடாக மக்களிடம் இந்தத் தீர்வுகளை ஒரு 'பேசுபொருளாக' மாற்றும் விழிப்புணர்வுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அரசியல் கட்சிகள் வெறும் தேர்தல் இயந்திரங்களாக மட்டும் இயங்காமல், சமூக மாற்றத்திற்கான கருத்தியல் தளங்களாக மாற வேண்டிய தருணம் இதுவாகும். சிவில் அமைப்புகளின் பங்களிப்பும் இதில் காத்திரமான முறையில் உள்வாங்கப்பட வேண்டும்.

இந்த அரசியல் தீர்வு முயற்சிகள் சர்வதேச மயமாக்கப்பட வேண்டியது அவசியமாகும். இலங்கையின் இனப் பிரச்சினை என்பது சாராம்சத்தில் ஒரு சர்வதேச விவகாரமாகும். மூன்றாம் தரப்பின் தலையீடின்றி இலங்கை அரசு ஒருபோதும் இறங்கி வராது என்பதை வரலாறு கற்பித்துள்ளது.

இதற்காக தாயக மட்டம், இலங்கை மட்டம், பிராந்திய மட்டம் மற்றும் சர்வதேச மட்டம் என நான்கு மட்டங்களில் இந்த வரைபுகள் பேசும் பொருளாக்கப்பட வேண்டும். இந்தியத் தமிழ்நாட்டின் ஊடாக இந்திய மத்திய அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து, பிராந்திய வல்லரசான இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.

அதேநேரம், புலம்பெயர் சமூகம் சர்வதேச அரங்கில் இராஜதந்திர ரீதியாக இதனை முன்னெடுக்க வேண்டும். தனித்து அரசியல் கட்சிகளும் சட்டத்தரணிகள் பேரவையும் மட்டும் இதனைச்சாதிக்க முடியாது.


தமிழ் அரசியலோடு தொடர்புடைய அடிப்படைச் சக்திகள், நட்புச் சக்திகளென அனைத்தையும் இணைத்து உலகளாவிய ரீதியிலொரு 'தமிழ்த் தேசிய அரசியல் பேரியக்கமாக' எழுச்சியடையும் போது தான் அனைத்துமே சாத்தியமாகும்.

ஈழநாடு
www.namatheelanadu.com



# தமிழீழத்தின் இதயபூமி எனப்படும் மணலாற்றை இழந்த கதை

ஒரு விடுதலைப்போராட்டத்தின் கெரில்லாப் போராளிகளின் இருப்புக்கு இயற்கைக் காடுகளின் வகிபாகம் எந்தளவிற்கு அவசியம் என்பதற்கு மணலாற்றுக்காடுகள் விடுதலைப்புலிகளுக்கு வழங்கிய அடைக்கலம் பேரடையாளம் ஆகிறது. ஈழப் புலிப் போராளிகளின் களமாடலும் அவர்கள் சிந்திய குருதிகளின் சுவடுகளும் அந்த நிலத்தில் ஆழ நனைத்திருக்கின்றன. ஈழத் தமிழ் மக்கள் தமது தாயக நிலத்தை மீட்கும் ஆயுத விடுதலைப் போராட்டத்தை ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பதற்கு மணலாறு வரலாற்றின் மீது ஒரு சாட்சியாக இருக்கிறது.





படம் : இணையம்


தீபச்செல்வன்

### தடை வலயம்

1984 மார்ச் 21ஆம் நாள் மணலாற்றில் நடைபெற்ற பெரு ஆக்கிரமிப்புச் சம்பவம் இலங்கையின் இனவியல் வரலாற்றில் மிகுந்த வலியுடன் நினைவுகொள்ளப்படுகிறது. அந்த நாளில் இலங்கை அரசு மணலாறுப் பகுதியை "தடைவலயமாக" அறிவித்து, அங்கு பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்த தமிழர்களை பலவந்தமாக வெளியேற்றியது. இந்தச் சம்பவம் வெறும் வலிந்த இடம்பெயர்வு நடவடிக்கையாக மாத்திரமின்றி ஒரு பூர்வீக இனத்தின் வாழ்வாதாரம், நில உரிமை மற்றும் இன அடையாளத்தை அபகரித்த ஒரு அநீதியாக நிகழ்த்தப்பட்டது.

மணலாறு என்பது புலிகளின் நிர்வாகத்தில் ஒரு தனி மாவட்டம். இது வடமத்திய மற்றும் வடக்கு மாகாணங்களின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள வளமான நிலப்பரப்பு. விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்றவற்றை நம்பி வாழ்ந்த பூர்வக் குடிகளான தமிழர் சமூகங்கள் இப்பகுதியில் நீண்டகாலமாக வாழ்ந்து வந்தனர். ஆனால் 1980களின் ஆரம்பத்தில் அரசியல் மற்றும் இராணுவ நிலைமைகள் தீவிரமடைந்தபோது, பேரினவாதத்தின் இலக்காக மாறியது. இதன் தொடர்ச்சியாக 1984 மார்ச் மாதத்தில் இந்தப் பகுதி தடைவலயமாக அறிவிக்கப்பட்டு ஆக்கிரமிப்பு உச்சப்படுத்தப்பட்டது.

### விரட்டப்பட்ட தமிழர்கள்

சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் அக் காலப் பகுதியில் நிகழ்த்தப்பட்ட சிங்கள வன்முறைகள் காரணமாக வாழ்ந்த தமிழர்கள் திடீரென வெளியேற்றப்பட்டனர். மக்கள் தங்கள் வீடுகள், நிலங்கள், விவசாயப் பயிர்கள் அனைத்தையும் விட்டுவிட்டு பாதுகாப்புக்காக இடம்பெயர வேண்டிய சூழ்நிலையில் தள்ளப்பட்டனர். இப்படித் தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டு மணலாற்றுப் பகுதியை சிங்களப் பகுதியாக்குவதே அன்றைய ஆட்சியாளர்களினதும் பேரினவாதிகளின் நோக்கம்.

இந்த நிலையில் தமிழர் கிராமங்களின் நிலப்பரப்புகளில் தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆயிரக்கணக்கான சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டனர். இந்த குடியேற்றங்கள் பல கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டன; அதனுடன் இணைந்து புதிய பாசனத் திட்டங்கள், வீதி வசதிகள், மற்றும் அரச உதவிகள் என்பன அரசால் வழங்கப்பட்டு சிங்களக் குடியேற்றம் விஸ்திரிக்கப்பட்டது.

### வெலியோயா பெயர் மாற்றம்

அதேசமயம், தமிழர் நிலத்தை தொடர்ந்து ஆக்கிரமிக்கும் வகையிலும் சிங்களக் குடியெற்றங்களைப் பாதுகாக்கும் நோக்கிலும் இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டன. இது அந்தப் பகுதியின் மக்கள் தொகை அமைப்பை மட்டுமின்றி, அதன் நாளந்தோறும் வாழ்வியல் சூழலையும் மாற்றியது. மேலும், பெரும் அநீதியாகவும் ஆக்கிரமிப்பாகவும் மணலாறு என்ற பாரம்பரிய தமிழ் பெயர் நீக்கப்பட்டு 'வெலியோயா' போன்ற சிங்களப் பெயர் அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்தப்பட்டதும், அப் பெயரில் தனிப் பிரதேச செயலாகம் உருவாக்கப்பட்டதும் இலங்கை அரசு ஆக்கிரமிப்பின் வழியாக ஈழ இனத்தை அதிகாரபூர்வமாக ஒடுக்கியதன் வெளிப்பாடாகும்.

அத்துடன் கிராமங்கள், வீதிகள், மற்றும் நிர்வாகப் பிரிவுகளுக்குச் சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டது. இது அந்தப் பகுதியின் பாரம்பரிய அடையாளத்தை மாற்றும் திட்டமிட்ட செயற்பாடாக நிகழ்த்தப்பட்டது. இப்படியாகச் சிங்களக் குடியேற்றம், சிங்கள இராணுவமயமாக்கல் மற்றும் சிங்களப் பெயர்மாற்றம் ஆகியவை ஒன்றிணைந்து, மணலாற்றின் வரலாற்று நினைவுகளையும் இன அடையாளத்தையும் திரிவுபடுத்தும் செயலாக நிகழ்த்தப்பட்டது. நிலம் என்பது வெறும் வாழ்வின் ஆதாரம் மட்டுமல்ல, ஒரு இனத்தின் அடையாளம், வரலாறு மற்றும் உரிமையும்தான். அந்த நிலத்திலிருந்து வேரறுக்கப்பட்ட அனுபவம், ஈழத் தமிழர்களின் அரசியல் சிந்தனையையும் எதிர்ப்புப் போக்கையும் வலுப்படுத்தியது.

### ஆயுதம் ஏந்திய போராளிகள்

மணலாறு ஆக்கிரமிப்பும் இலங்கையில் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்திற்க அடிப்படைக் காரணங்களில் ஒன்றாகியது. மக்கள் அனுபவித்த அநீதி உணர்வு, அரசின் மீதான நம்பிக்கையின்மை, மற்றும் பாதுகாப்பின்மை ஆகியவை இளைஞர்களை ஆயுங்களைப் பற்றிப் பிடிக்கும் நிலைக்குத் தள்ளியது. இந்த நிகழ்வை ஒரு தனித்த சம்பவமாகப் பார்க்காது இலங்கையின் நீண்டகால இனமோதல் வரலாற்றின் ஒரு பகுதியாகப் புரிந்துகொள்ளும்போது அன்றைய ஈழ இளைஞர்களின் விடுதலைக் கனவின் திரட்சியைப் புரிந்துகொள்ளலாம்.

மணலாறு பகுதியைச் சேர்ந்த பல இளைஞர்கள், 1984இல் ஏற்பட்ட இடம்பெயர்வு மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அநீதி உணர்வுகளின் பின்னணியில் ஆயுதப் போராட்டப் பாதையைத் தேர்ந்தெடுத்தனர். குடும்பங்களை இழந்தது, நிலங்களை இழந்தது, வாழ்நிலம் குறித்து ஏற்பட்ட காதல் என்பவற்றின் விளைவாக, பலர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து தங்கள் நிலம் மற்றும் உரிமைகளை மீட்டெடுக்கப் போராடினர். மணலாறு மற்றும் அதனைச் சுற்றிய பகுதிகள் பின்னர் முக்கியமான இராணுவ மோதல் வலயங்களாக மாறிய போது, அப்பகுதியைச் சேர்ந்த போராளிகள் பல முக்கியப் போராட்டங்களிலும் பங்கேற்றனர்.

### மணலாறு புலி வீரர்கள்

வரலாறு முழுவதும் மணலாறு போராளிகள் பெரும் வகிபங்கபளை ஈழப் போராட்டத்தில் செலுத்தினர். 1990களின் தொடக்கத்தில், குறிப்பாக 1992இல், அடர்ந்த காட்டுப்பகுதியான மணலாற்றில் வேவு மற்றும் கரந்தடிப் போர்முறைகளில் திறம்பட செயல்பட்டனர். மணலாறு பகுதிக்குள் இலங்கை இராணுவ ஊடுருவலைத் தடுத்தல், இராணுவ முகாம்கள் மீதான தாக்குதல் மற்றும் இப்பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தமை என்பன ஈழப் போரில் வலிய தகவல்கள்.

1992இல் மணலாற்றை பாதுகாக்க லெப். கேணல் பரிபாலினி போன்ற பெண் போராளிகள் தலைமையிலான புதிய அணிகள் உருவாக்கப்பட்டன. அத்துடனக் 1995இல் மணலாறு கோட்டத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவத்தின் ஐந்து படைத்தளங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், முந்திரிகைக்குளம் இராணுவ முகாமை இலக்கு வைத்த செயல்பாடுகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. ஈழ விடுதலைப் போராட்டத்தில் முக்கிய தளபதியாக விளங்குகிற பிரிக்கேடியர் பால்ராஜ் (கொக்குத்தொடுவாய்) போன்றவர்கள்மணலாறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

உண்மையில் ஆக்கிரமிப்பும் அடக்குமுறையும்தான் ஒரு விடுதலைப் போராட்டத்தை உருவாக்குகிறது. இந்த நாளை நாம் இன்றும் நினைவுகொள்ள வேண்டியுள்ளது. இன்னமும் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகள், நில உரிமை மீட்பு, மற்றும் நீதியுடன் கூடிய சமரசம் சாத்தியமற்ற நிலையில் இன்னமும் எங்கள் நிலத்தில் தையிட்டி எனக் கொல்லைப் புறம்வரையில் ஆக்கிரமிப்பு நீள்கின்ற நிலையில் நாம் இழந்த ஒரு நிலத்தின் வரலாறும் நினைவும் ஒடுக்கப்பட்ட ஈழ இனத்தை நடுங்கவும் இயங்கவும் செய்கிறது.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 06 மலர் 66 மார்ச் 2026 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# தமிழர்களின் எதிர்காலத்தில் தாக்கம் செய்யும் பிரித்தானிய பிரதிப் பிரதமர் லமியின் விஜயம்

பிரித்தானிய பிரதிப் பிரதமர் டேவிட் லமியின் இலங்கை விஜயமானது, தென்னிலங்கை அரசியலில் ஒரு சாதாரண இராஜதந்திர நிகழ்வாகக் கடந்து செல்லப்பட்டாலும், தமிழ் மக்களின் அரசியல் இருப்பைப் பொறுத்தவரை அதுமிக முக்கியமானதொரு செய்தியை உரக்கச் சொல்லியிருக்கிறது.

குறிப்பாக, கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்து முன்வைத்த விடயங்கள், தற்போதைய 'மாற்றத்திற்கான' அரசாங்கத்தின் கீழ் தமிழர்களின் உண்மையான நிலைப்பாட்டைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கம், 'இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை' என்பதை ஒரு பிரதான கோசமாக முன்வைக்கின்றது.

வெளிப்பார்வைக்கு இதுவொரு முற்போக்கான விடயமாகத் தோன்றினாலும், அதன் ஆழத்தில் தமிழர்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த மௌனம் ஒழிந்திருப்பதை தமிழ்த் தலைமைகள் சரியாகச் சுட்டிக் காட்டியுள்ளன.

'ஒற்றுமை' என்பது உரிமைகளைத் தாரைவார்ப்பதன் மூலம் நிகழ முடியாது. அரசியல் தீர்வு மற்றும் புதிய அரசியலமைப்பு குறித்துப் பேசுவதை ஜனாதிபதி தவிர்ப்பதும், உரிமைசார் கோரிக்கைகளை 'இனவாதம்' என்று முத்திரை குத்துவதும் பழைய காலத்து அடக்குமுறை அரசியலின் நவீன வடிவமேயன்றி வேறில்லை என்பதை தமிழ்ப் பிரதிநிதிகள் டேவிட் லமியிடம் அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்துள்ளனர்.

அதேபோன்று, மாகாண சபை முறையை வலுவிழக்கச் செய்து, தேர்தல்களைத் தாமதப்படுத்துவது என்பது ஜனநாயகப் பரவலாக்கத்தை முடக்கும் செயலாகும். ஆட்சிக்கு வந்து ஓராண்டுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக அளித்த வாக்குறுதி காற்றில் பறக்கவிடப்பட்டுள்ள சூழலில், சர்வதேசத்தின் அழுத்தம் இங்கு இன்றியமையாததாகின்றது.

போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக்கூறல், இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான தடைகள் மற்றும் சர்வதேச விசாரணைகளின் அவசியம் குறித்து டேவிட் லமியிடம் வலியுறுத்தப்பட்டிருப்பது, முப்பது ஆண்டுகால யுத்தத்திற்குப் பின்னரும் நீதி இன்னும் கிடைக்கவில்லை என்பதன் வேதனை மிகுந்த வெளிப்பாடாகும்.

பிரித்தானிய பிரதிப் பிரதமர், புலம்பெயர் தமிழ் மக்களின் அழுத்தங்களையும் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளையும் தான் அறிந்திருப்பதாகக் குறிப்பிட்டிருப்பது, தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் வாழும் தமிழர்களின் ஒருங்கிணைந்த போராட்டத்தின் வலிமையைக் காட்டுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் வெளிப்படைத் தன்மை மற்றும் மனித உரிமைகள் குறித்துப் பேசியிருப்பது ஒருபுறமிருக்க, தமிழர்களின் தனித்துவமான அரசியல் அபிலாஷைகளை அங்கீகரிக்காமல் நாட்டில் உண்மையான அமைதியை ஏற்படுத்த முடியாது.

மனிதாபிமான உதவிகள் மற்றும் வர்த்தக உறவுகள் ஒரு நாட்டின் பொருளாதார மீட்சிக்கு அவசியமானவை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், இலங்கையில் ஒரு நிலையான சமாதானம் ஏற்பட வேண்டுமாயின், அது நீதியையும் அதிகாரப் பகிர்வையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

பிரித்தானியா போன்ற வல்லரசுகள், வெறும் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் (யானைமனித மோதல் போன்றவை) சார்ந்த உறவுகளுடன் நின்றுவிடாமல், இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதையும், மாகாண சபை முறைமை ஊடாக அதிகாரம் பகிரப்படுவதையும் உறுதிசெய்யத் தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று வலிறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமாரவின் 'அனைவரும் இலங்கையர்' என்ற முழக்கம், தமிழ் மக்களின் தனித்துவமான அடையாளத்தையும் அரசியல் தன்னாட்சியையும் கரைத்துவிடும் முயற்சியாக மாறிவிடக்கூடாது. ஒற்றுமை என்பது அடக்குமுறையின் கீழ் நிகழும் மௌனமல்ல் அது உரிமைகள் மதிக்கப்படும் சமத்துவமான களமாகும்.

டேவிட் லமியின் இந்த விஜயம், சர்வதேச சமூகம் இலங்கையின் இனப்பிரச்சினையை இன்னும் மறக்கவில்லை என்பதற்கான சான்றாக அமைவதோடு, தமிழ் மக்களின் உரிமைகளுக்காக சர்வதேசத் தளத்தில் குரல் கொடுப்பதற்கான புதிய கதவையும் திறந்துவிட்டுள்ளது என்ற நம்பிக்கை வெகுவாக ஏற்படுத்தியுள்ளது.



# கொக்குத்தொடுவாயில் அத்துமீறிய உப்பளம் அமைக்கும் முயற்சியை தடுக்குமாறு

## ரவிகரன் எம்.பி கோரிக்கை

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால் வெளிப்பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகளில் பெரும்பான்மை இனத்தவரால் அத்துமீறி உப்பளம் அமைக்கும் முயற்சியைத் தடுக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அனுப்பி வைக்கப்பட்டுள் கடிதத்திற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மகாவலி பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதமர் அலுவலகத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த அத்துமீறி உப்பளம் அமைக்கும் முயற்சியைத் தடுக்குமாறு வலியுறுத்தி கடந்த சனிக்கிழமை (07) அன்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த கடிதம் பிரதமர் ஹரிணி அமரசூரியவிற்கும் பிரதியிடப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள குறித்த கடிதத்திற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதமர் அலுவலகத்தால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவு பகுதியில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகம் அவர்களால் பேணப்பட்டுவரும் TOPO PP70 இலக்க நில அளவை வரைபடத்தின் Inset 17, 18, 19 ஆகிய பகுதிகளுக்குரிய தமிழ் மக்களின் பூர்வீக தனியார் வயல் காணிகளையும் அதற்கு இடைப்பட்ட மேய்ச்சல் தரை நிலங்களையும் மகாவலி அதிகார சபை தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள வர்த்தகருக்கு சட்டவிரோதமாக குத்தகைக்கு வழங்கியுள்ளது.

இந்நிலையில் மகாவலி அதிகாரசபையிடமிருந்து சட்டவிரோத குத்தகை அனுமதியைப் பெற்றுக்கொண்ட குறித்த பெரும்பான்மையின வர்த்தகர் தமிழ்மக்களின் தனியார்காணிகளில் அத்துமீறி நுழைந்து உப்பளம் அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதால் இனமுறுகல் ஏற்படும் அபாய நிலை தோன்றியுள்ளது.

எனவே இந்த சட்டவிரோதமான அத்துமீறிய உப்பளம் அமைக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மாகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு அன்று கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

# மறைந்த காட்டுனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து



# மத்தியகிழக்கு பதற்றமும் இலங்கையின் தடுமாற்றமும்

தேசிகன்

மத்திய கிழக்கு மற்றும் மேற்கு ஆசிய பிராந்தியங்களில் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையிலான நேரடி மற்றும் மறைமுக மோதல்கள், உலகளாவிய ரீதியில் பாரிய பொருளாதார அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக, சர்வதேச எரிசக்தி விநியோகத்தின் இதயமாகக் கருதப்படும் ஹோர்முஸ் நீரிணை மற்றும் சுயஸ் கால்வாய் போன்ற கடல்சார் பாதைகளில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், இலங்கையை போன்ற இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளை மிக மோசமாகப் பாதித்துள்ளன.

இந்த உலகளாவிய போர்ச் சூழல், இலங்கைக்குள் வலுசக்தித் தட்டுப்பாட்டு அச்சம், வாழ்வாதார முடக்கம் மற்றும் ஏற்றுமதி வருவாய் வீழ்ச்சி உள்ளிட்ட பன்முகத்தன்மை கொண்ட நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது.

எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பே இலங்கையில் தற்போது நிலவும் மிக முக்கியமான பிரச்சினையாகும். உலகச் சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை குறுகிய காலத்தில் 60 டொலரிலிருந்து 100 டொலராக உயர்ந்துள்ளமை, உள்நாட்டு எரிபொருள் விலையை நிலையாகப் பேணுவதில் பாரிய சவால்களை ஏற்படுத்தியுள்ளது.

இதன் விளைவாக, வலுசக்தி நுகர்வைக் குறைக்கும் நோக்கில் வாராந்தம் புதன்கிழமையை அரச விடுமுறை தினமாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் நீதிமன்றங்கள் போன்ற கட்டமைப்புகளுக்கு இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதோடு, அரச உற்சவங்கள் அனைத்தும் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், எரிபொருள் விநியோகத்தை முகாமை செய்வதற்கு மீண்டும் ‘கியூ.ஆர்.’ கோட்டா முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், வாகனங்களின் இரண்டாவது உரிமையாளர்கள் பதிவுகளை மேற்கொள்வதில் எதிர்நோக்கும் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசைகள் காணப்படுவதோடு, இது பொதுமக்களிடையே பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இக்கட்டுப்பாடு மற்றும் தட்டுப்பாடு காரணமாக நாட்டின் போக்குவரத்து மற்றும் சேவைத் துறைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. குறிப்பாக, வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் 15 லீற்றர் வாராந்த ஒதுக்கீடு, அவர்களின் 24 மணிநேர அத்தியாவசியச் சேவைக்கு போதுமானதாக இல்லையென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இதேபோல், வாடகை முச்சக்கர வண்டி சாரதிகள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க வாரத்திற்கு குறைந்தது 35 லீற்றர் எரிபொருள் அவசியம் எனக் கோரி போராட்ட எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் தேயிலை மற்றும் விவசாயத் துறைகள் இந்த நெருக்கடியால் இரட்டைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.


படம் : இணையம்

மத்திய கிழக்கு நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதால், இலங்கைக்கு மாதம் சுமார் 50 மில்லியன் அமெரிக்க டொலர் வருமான இழப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கப்பல் கட்டணங்களின் உயர்வு மற்றும் பாதுகாப்பு அச்சம் காரணமாக ஈராக், ஈரான், துருக்கி போன்ற நாடுகள் தேயிலை கொள்வனவை தற்காலிகமாக நிறுத்தியுள்ளன.

உள்நாட்டில் எரிபொருள் விலை உயர்வால் பச்சை தேயிலை போக்குவரத்துச் செலவு அதிகரித்துள்ளமை, ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சிறு தேயிலை தோட்ட விவசாயிகளை இத்தொழிலை விட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

விவசாயிகளுக்கு கோட்டா இன்றி எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும், உற்பத்தி செலவு அதிகரிப்பு இலாபத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

மேலும், சுற்றுலாத்துறை மற்றும் வாகன இறக்குமதித் துறைகளும் இக்கட்டான நிலையை எதிர்நோக்கியுள்ளன. ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளின் வருகை 2530 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த நெருக்கடியைச் சமாளிக்க அரசாங்கம் தனது நிர்வாகக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. 2026 மார்ச் 18 முதல் அமுலுக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ள வாராந்த விடுமுறைத் திட்டத்துடன், 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது வெளியிடப்பட்ட மின்சாரம் மற்றும் எரிபொருள் சிக்கன சுற்றுநிருபங்களை மீண்டும் கடுமையாகப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, எரிபொருள் விலைச் சூத்திரத்தின் கீழ் மானியங்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில், உலகச் சந்தை விலை உயர்வால் ஏற்படும் அழுத்தத்தைக் குறைக்க எரிபொருள் மீதான வரிகளைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் வலுவாக எழுந்துள்ளதோடு, எரிபொருள் விநியோகத்தை கண்காணிக்க பிரதமர் மற்றும் அமைச்சர்கள் தலைமையில் நான்கு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

நூறுவீதம் எரிபொருள் இறக்குமதியை நம்பியிருக்கும் இலங்கைக்கு, கப்பல் காப்புறுதிச் செலவுகள் மற்றும் மேலதிக போக்குவரத்து கட்டணங்கள் அந்நியச் செலாவணி கையிருப்பில் பாரிய அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

2022 ஆம் ஆண்டு நிலவிய மின்வெட்டு போன்றதொரு சூழல் மீண்டும் உருவாகாமல் தடுக்கவே இத்தகைய கடும் நடவடிக்கைகள் முன்னெச்சரிக்கையாக எடுக்கப்படுகின்றன.

இந்த உலகளாவிய நெருக்கடியின் தாக்கம் என்பது வெறும் பொருளாதாரத்துடன் மட்டும் நின்றுவிடாமல், நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனையும் பாதிக்கத் தொடங்கியுள்ளது.

வாராந்த விடுமுறைகள் மூலம் போக்குவரத்து நெரிசல் குறைக்கப்பட்டாலும், உற்பத்தித் துறைகளில் ஏற்படும் நேர விரயம் நீண்டகாலத்தில் பொருளாதார வளர்ச்சியை மந்தப்படுத்தும் அபாயம் உள்ளது.

குறிப்பாக, மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களிடமிருந்து கிடைக்கும் அந்நியச் செலாவணி வருவாய் குறைவடைந்தால், அது ரூபாயின் மதிப்பில் மேலும் தளம்பல்களை ஏற்படுத்தும்.

அரசாங்கம் தற்போது ஒரு மாத காலத்திற்குத் தேவையான கையிருப்பு இருப்பதாகக் கூறினாலும், ஹோர்முஸ் நீரிணை போன்ற கடல்சார் பாதைகள் முழுமையாக முடக்கப்பட்டால், இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பு மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படும்.

எனவே, அரசியல் பேதங்களைக் கடந்து நாடாக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படாவிட்டால், எதிர்காலத்தில் எரிபொருள் மற்றும் எரிவாயு அற்ற மிக மோசமான நிலைக்கு நாடு தள்ளப்படும் எனப்பேராதனைப் பல்கலைக்கழக பொருளாதாரத் துறை பேராசிரியர் வசந்த அத்துக்கோரள எச்சரித்துள்ளார்.

சர்வதேச அரசியல் மோதல்களால் ஏற்பட்டுள்ள இந்தத் தட்டுப்பாடு, இலங்கையின் அரசியல் தரப்பினரால் மாத்திரம் தீர்க்கப்பட முடியாததொரு சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

பேராசிரியர் வசந்த அத்துகோரள போன்ற பொருளாதார வல்லுநர்கள் எச்சரிப்பது போல, இதுவொரு தற்காலிக உள்நாட்டுப் பிரச்சினை அல்ல. மாறாக உலகளாவிய புவிசார் அரசியலுடன் பிணைக்கப்பட்டவொரு பெரும் நெருக்கடியாகும்.

எனவே, நவீன மேலாண்மை உத்திகளைப் பயன்படுத்தி எரிசக்தி மற்றும் பொருளாதார வளங்களைச் சரியான முறையில் பகிர்ந்தளிக்காவிடில், நாடு மீண்டுமொரு பாரிய பொருளாதார வீழ்ச்சிக்குள் தள்ளப்படுவதைத் தவிர்க்க முடியாது.

இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனக் கொள்கைகளை மதித்து, சம்பந்தப்பட்ட சர்வதேச தரப்பினரை நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ள நிலையில், சர்வதேச அளவில் போர் நிறுத்தமும் அமைதியும் ஏற்படுவதே இலங்கையின் இயல்பு நிலை திரும்புவதற்கான ஒரே நிரந்தர தீர்வாக அமையும்.

ஆனால் தற்போதைய நிலையில் அமெரிக்க, இஸ்ரேலிய, ஈரானிய போர் முடிவுக்கு வரும் சூழலை கொண்டிருக்கவில்லை. அது நீடித்துச் செல்வதற்கான போக்கினையே கொண்டிருக்கின்றது.

இந்த நிலைமையானது, குறித்த நாடுகளுக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த உலகநாடுகளின் பொருளாதாரத்துக்குதே பேரிடியாகவே இருக்கின்றது. இந்த சூழலில் இலங்கை போன்ற பொருளாதார ரீதியாக திவாலான நாடொன்று மீண்டெழும் பாதையில் தொடர்ந்தும் பயணிப்பது முட்படுகையே.

# வலிந்து இழுத்துக்கொண்ட சிக்கலால் வெளிநாட்டு கொள்கையில் தடுமாற்றம்



படம் : இணையம்

*தந்திரீகன்*

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான தீவிரமடைந்து வரும் மோதல் சூழல், உலக அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், இது இலங்கை போன்ற நாட்டின் வெளியுறவுக் கொள்கை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு பாரிய சவால்களை உருவாக்கியுள்ளது.

2026ஆம் ஆண்டின் பெப்ரவரி இறுதி நாளில் இருந்து ஈரான் மற்றும் இஸ்ரேல் தரப்புகளுக்கு இடையே அதிகரித்துள்ள நேரடித் தாக்குதல்கள், மத்திய கிழக்கைத் தாண்டி இந்தியப் பெருங்கடல் வரை விரிவடைந்துள்ளமை இலங்கையை தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளியுள்ளது.

இந்த மோதல்கள் சர்வதேச ரீதியானவை என்றாலும், சமீபத்திய நிகழ்வுகள் இலங்கை தனது இராஜதந்திர எல்லைகளைத் தாண்டி, இந்தப் பிரச்சினையில் தன்னை வலிந்து இழுத்துக்கொண்டதோ என்ற கேள்வியை வலுவாக எழுப்பியுள்ளது.

ஈரானுக்குச் சொந்தமான கப்பலான ஐ.ஆர்.ஐ.எஸ் டெனா இலங்கை கடற்பரப்புக்கு அருகில் வைத்துத் தாக்கி அழிக்கப்பட்டமை இலங்கையின் தேசிய பாதுகாப்பில் உள்ள பாரிய பலவீனங்களை வெளிப்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, மற்றுமொரு ஈரானியக் கப்பலிலான ஐ.ஆர்.ஐ.எஸ்.பேஷாரிருந்து 208 பேர் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டு, தற்போது வெலிசறை கடற்படை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 32பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதோடு, உயிரிழந்த 84 பேரின் உடலங்கள் மீண்டும் ஈரானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச கடற்பரப்பில் நடக்கும் இந்த நிழல் யுத்தம் இலங்கையின் கடல் எல்லைக்கு மிக அருகில் வந்திருப்பது, நாட்டின் இறையாண்மைக்கு விடுக்கப்பட்ட நேரடி அச்சுறுத்தலாகும்.

இந்த விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் கையாளும் விதம் அதன் வெளியுறவுக் கொள்கையில் உள்ள பாரிய தடுமாற்றத்தைத் தெளிவாகக் காட்டுகிறது.

'அனைவருடனும் நட்பு, எவருடனும் பகை இல்லை' என்ற அணிசேராக் கொள்கையை இலங்கை கொள்கை ரீதியாக முன்மொழிந்தாலும், நடைமுறையில் அது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கடும் அழுத்தங்களுக்கு அடிபணிந்துள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

செங்கடல் பகுதியில் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அமெரிக்கா முன்னெடுத்த 'புரொஸ்பரட்டி கார்டியன்' நடவடிக்கையில் இலங்கை தனது கடற்படையை ஈடுபடுத்தியமை, சிறிய தீவு நாடு தேவையின்றிக் வல்லரசுகளின் இராணுவ மோதலில் தன்னை இணைத்துக் கொண்ட செயலாகவே பார்க்கப்படுகிறது.

இது சர்வதேச வர்த்தகப் பாதையைப் பாதுகாப்பதற்கான முயற்சி என்று நியாயப்படுத்தப்பட்டாலும், ஈரான் போன்ற நாடுகளின் பார்வையில் இது அமெரிக்கஇஸ்ரேலிய அச்சுக்கு இலங்கை வழங்கும் மறைமுக ஆதரவாகவே தென்படுகிறது.

தற்போது வெலிசறை முகாமில் உள்ள ஈரானியக் கடற்பயணிகள் தொடர்பான இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகள் மிகவும் சிக்கலான கட்டத்தை எட்டியுள்ளன. ஒருபுறம் ஈரானியத் தூதரகம் தனது குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் கப்பல் மீதான தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணை கோரி அழுத்தம் கொடுத்து வருகிறது.

மறுபுறம் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய தரப்புகள் இச்சம்பவத்தை ஈரான் மீதான தமது தற்காப்பு நடவடிக்கையாகச் சித்தரிக்க முயல்கின்றன. இலங்கையின் தற்போதைய அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் முன் அனுபவமற்ற தன்மையைக் கொண்டிருப்பதால், இந்த இருதரப்பு அழுத்தங்களுக்கு மத்தியில் ஒரு நடுநிலையான முடிவை எடுக்க முடியாமல் தடுமாறுகிறது.

இது இலங்கையின் சர்வதேச நற்பெயருக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், மத்திய கிழக்கில் வாழும் 15 இலட்சம் இலங்கையர்களின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இந்த நெருக்கடி இலங்கையின் கடல்சார் பாதுகாப்புச் சட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர மாற்றங்களைச் சுட்டிக்காட்டியுள்ளது. தற்போதைய சட்டங்கள் போர்க்காலச் சூழலில் அந்நியக் கப்பல்கள் நாட்டின் கடல் எல்லையில் அத்துமீறுவதையோ அல்லது தாக்குதலுக்கு உள்ளாவதையோ கையாள்வதற்குப் போதுமானதாக இல்லை.

குறிப்பாக, 'கடல்சார் வலயச் சட்டம்' மற்றும் 'தேசிய பாதுகாப்புச் சட்டம்' ஆகியவற்றில் போர்க்கால அவசரகால விதிமுறைகள் சேர்க்கப்பட வேண்டும். இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழையும் வெளிநாட்டுக் கப்பல்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் மீதான தாக்குதல்களின் போது இலங்கை எடுக்க வேண்டிய சட்டரீதியான நடவடிக்கைகள் குறித்து தெளிவான சட்டக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். இல்லையேல், வல்லரசுகள் இலங்கையின் கடற்பரப்பைத் தமது போர்க்களமாகப் பயன்படுத்துவதைத் தடுக்க முடியாமல் போய்விடும்.

வெலிசறை முகாமில் உள்ள ஈரானியர்கள் தொடர்பான சமீபத்திய நகர்வுகள் இலங்கையின் இராஜதந்திரச் சமநிலையை மேலும் சோதித்து வருகின்றன. ஈரானிய வெளியுறவுத்துறை அமைச்சகம், மீட்கப்பட்டவர்கள் போர்க்கைதிகள் அல்லர் எனவும், அவர்கள் சர்வதேச சட்டங்களுக்கு அமைய மனிதாபிமான அடிப்படையில் கையாளப்பட வேண்டும் எனவும் கொழும்புக்கு தகவல் அனுப்பியுள்ளனர்.

அதேவேளை, மீட்கப்பட்டவர்களிடம் அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்த அனுமதி கோரியிருப்பது இலங்கையை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த அழுத்தங்களுக்கு மத்தியில், இலங்கை அரசாங்கம் அவர்களை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகவாண்மையின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவருவது குறித்து ஆலோசித்து வருகிறது. இது ஒருபுறம் அமெரிக்காவைத் திருப்திப்படுத்தினாலும், ஈரானுடனான நீண்டகால நட்புறவில் நிரந்தர விரிசலை ஏற்படுத்தக்கூடிய அபாயத்தைக் கொண்டுள்ளது.

பொருளாதார ரீதியாகவும் இம்மோதல் இலங்கைக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்வு மற்றும் காப்புறுதிச் செலவுகள் அதிகரிப்பு என்பன இலங்கையின் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைத் தாமதப்படுத்துகின்றன.

வளைகுடா நாடுகளில் இருந்து தொழிலாளர்கள் பெருமளவில் நாடு திரும்ப நேரிட்டால், அது வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அந்நியச் செலாவணி பற்றாக்குறையையும் மீண்டும் தீவிரப்படுத்தும். ஐரோப்பாவுக்கான கப்பல் போக்குவரத்து வழித்தடங்கள் மாறுபடுவதால் ஏற்றுமதிச் செலவுகள் அதிகரித்து, உள்ளூர் உற்பத்தியாளர்கள் கடும் போட்டியை எதிர்நோக்கியுள்ளனர்.

மேலும், இந்த இராஜதந்திரத் தடுமாற்றமானது இலங்கையின் தேசிய புலனாய்வுப் பிரிவினருக்கும் பெரும் சவாலாக மாறியுள்ளது. கடற்பரப்பில் நிகழும் தாக்குதல்கள் தரைவழிப் பாதுகாப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், கடலோரப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு வலைப்பின்னலை நவீனமயப்படுத்துவது இன்றியமையாதது.

உளவுத்துறை தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் அமெரிக்கா போன்ற நாடுகளுடன் இலங்கை கொண்டுள்ள நெருக்கம், ஈரானுடனான நட்புறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, இலங்கையின் முக்கிய துறைமுகங்கள் சர்வதேச நிழல் யுத்தத்தின் கேந்திர மையங்களாக மாறப்படுவது நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பிற்குத் தீராத தலைவலியாக அமையக்கூடும்.

இத்தகைய சிக்கலான தருணத்தில், ஆணித்தரமான முடிவுகளை எடுக்கத் தவறும் பட்சத்தில், இலங்கை சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்குப் பலியாகும் ஒரு கைப்பாவையாக மாறும் அபாயம் உள்ளது.

வல்லரசுகளின் போரில் நடுநிலைமை என்ற போர்வையில் இலங்கை எடுத்த சில அவசரமான முடிவுகள், நாட்டை ஒரு சர்வதேச மோதல் களமாக மாற்றும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும், தெளிவான வெளியுறவுறவுக் கொள்கையை வகுப்பதிலும் அரசாங்கம் காட்டும் தடுமாற்றம், இலங்கையை இந்தப் பிரச்சினையில் வலிந்து இழுத்துச் சென்றுள்ளது.

தனது புவிசார் அரசியலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, வல்லரசுகளின் கருவியாக மாறாமல், தேசிய நலனை முதன்மைப்படுத்திய ஒரு தீர்க்கமான கொள்கையை வகுக்கத் தவறியுள்ளதால், இலங்கை மீண்டுமொரு நீண்டகாலப் பொருளாதார மற்றும் பாதுகாப்பு நெருக்கடியில் தற்போதைக்கு சிக்குண்டுள்ளது.




# சிறுநீரகத்தை விற்கும் போராளி...
# திட்டமிட்ட இனவழிப்பை தடுக்குமா சர்வதேசம்?

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் வேதனை

ஈழத்தில் தமிழ் மக்களின் விடிவுக்காகவும் உரிமைக்காகவும் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகள் இன்று தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் இன்னமும் சமராடிக் கொண்டே உள்ளனர் என்பதற்குச் அண்மையில் கடனை அடைக்கத் தன்னுடைய சிறுநீரகத்தை விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட முன்னாள் பெண் போராளியின் சம்பவம் தக்க சாட்சி என நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் தெரிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் 2009இற்குப் பின் எதிர்கொள்ளும் அவலங்கள் குறித்து அமையம் வெளியிட்டுள்ள விரிவான அறிக்கை வருமாறு:

### பேரவலத்தில் தமிழீழம்

“போரின் முடிவிற்குப் பின்னரும் அமைதி நிலைநாட்டப்படவில்லை என்ற உணர்வை பல முன்னாள் போராளிகளின் வாழ்க்கை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, கடனை அடைக்க சிறுநீரகத்தை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்ட முன்னாள் பெண் போராளியின் சம்பவம், போருக்குப் பின்னான சமூகபொருளாதார சிதைவின் மிகக் கொடூரமான சின்னமாகும். ஒருகாலத்தில் ஆயுதம் ஏந்தி போராடியவர்கள் இன்று வாழ்வாதாரத்திற்காக உடலையே விற்கும் நிலைக்கு தள்ளப்படுவது, அரசியல் தீர்வின்மையின் விளைவே ஆகும். இதுவே தமிழர் தேசத்தின் பேரவல நிலையுமாகும்.

போராளிகளின் மீள்வாழ்வுத் திட்டங்கள் நடைமுறையில் முழுமையாக வெற்றி பெறவில்லை என்பதற்கு தமிழீழத்தில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் பல் வேறு சம்பவங்கள் சாட்சிகள் ஆகியுள்ளன. தொழில் வாய்ப்பின்னை, சமூக ஒதுக்கல் மற்றும் பாகுபாடு, அரச படைகளின் கண்காணிப்பு ஆகியவை போராளிகளை ஒரு நிழல் வாழ்க்கைக்கு தள்ளியுள்ளன. பெண்கள் போராளிகளின் நிலை இன்னும் மோசமான நிலையில் உள்ளது. அவர்கள் குடும்ப ஆதரவின்றி, பாலின அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வறுமையுடன் போராடும் அவலத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

### தொடரும் மர்ம மரணங்கள்

அத்துடன் முன்னாள் போராளிகளின் தொடர்ச்சியான மர்ம மரணங்கள் பல கேள்விகளை எழுப்பி நிற்கின்றன. பலர் திடீர் உடல்நலக்குறைவால் இறக்கும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அத்துடன் சில போராளிகள் தற்கொலை செய்துகொண்ட நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. ஆனால் அவையும் மேற்போந்த காரணங்களால் நிகழ்த்தப்பட்ட கொலைகளாகவே கொள்ளப்பட வேண்டும். இம்மரணங்களின் பின்னணி குறித்து எவரும் ஆராய்கின்ற நிலையிலும் இல்லை. ஆனால் மரணங்கள் தொடர்கின்றன. எனினும் உறவினர்களும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் இவை சாதாரண மரணங்களல்ல என்று கூறுகின்றனர். விசாரணைகள் துல்லியமாகவும் சுயாதீனமாகவும் நடைபெறாததால், திட்டமிட்டு உண்மை மறைக்கப்பட்டுள்ளது.

தடுப்பு முகாம்களில் இருந்த காலத்தில் முன்னாள் போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்பட்டதாகும் குற்றச்சாட்டுகள் தொடர்ந்து எழுந்துள்ளன. ஏனெனில் உடல்நலக் கோளாறுகள், அசாதாரண நோய்கள், திடீர் மரணங்கள் ஆகியவை இந்த சந்தேகங்களை வலுப்படுத்துகின்றன. இதுபோன்ற குற்றச்சாட்டுகளை பாதிக்கப்பட்ட தரப்பினர் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக முன்வைத்து வருகின்றனர். இவை உண்மையென நிரூபிக்கப்பட்டால், அது மனித உரிமை மீறலின் மிக உயர்ந்த நிலை என்பதுடன் திட்டமிட்ட இனவழிப்பு என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் இதனை சுயாதீன சர்வதேச விசாரணைகள் வழியாகவே முன்னெடுக்க முடியும் என்பதும் போராளிகளின் உறுதியான எதிர்பார்ப்பாகும்.

### போராளிகள் வாக்குமூலம்

சில முன்னாள் போராளிகள் தாங்கள் தடுப்பு முகாங்களில் இருந்தபோது அறியப்படாத மருந்துகள் அல்லது ‘விச ஊசிகள்’ தமக்கு ஏற்றப்பட்டதாக இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக் கழுவின் முன்பாக கடந்த 2016ஆம் ஆண்டில் வாக்குமூலங்கள் வழங்கினார்கள். இவ்வாறு ஊசி ஏற்றப்பட்டதன் பின்னர் உடல் வலிமை குறைதல், தொடர்ந்து சோர்வு, நரம்பு பலவீனம் போன்ற அறிகுறிகளை அவர்கள் அனுபவித்து வருவதாகக் கூறுகின்றனர். இத்தகைய சாட்சியங்கள் போராளிகளின் தொடரும் மர்ம மரணங்களுடன் ஒத்துப்போவதும் எம்மை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது.

இந்த உடல்நல மாற்றங்களால் அவர்கள் வேலை செய்வதற்கான திறனை பாதிப்பதுடன், தினசரி வாழ்க்கையையும் கடுமையாக பாதிக்கின்றன. உடல் வலிமையை இழந்த முன்னாள் போராளிகள் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மேலும் பின்னடைவடைந்து வருகின்றனர். இத்தகைய வாக்குமூலங்கள் உண்மையென நிரூபிக்கப்பட்டால், அது தனிநபர் மட்டுமல்ல, ஒரு முழு இனத்தின்மீது நிகழ்த்தப்பட்ட மௌன யுத்தம் என்பதும் திட்டமிட்ட இனவழிப்பு என்பதும் உறுதியாகும். நேரடி படுகொலைகளாக இல்லாவிட்டாலும்,வாழ்வாதாரத்தை மறுக்கும் கொள்கைகள், பொருளாதார சிதைவுகள், மனநல அழுத்தங்கள், சமூக ஒதுக்கல் ஆகியவை ஒரு சமூகத்தை மெதுவாக அழிக்கும் வழிகளாகும்.

### ஆபத்தான முடிவுகள்

அத்துடன் போராளிகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் வறுமை, கடன் சுமைகள், வேலைவாய்ப்பு இல்லாமை ஆகியவை, அவர்களை தன்னிச்சையான அழிவின் பாதைக்கு தள்ளுகின்ற அதே வேளையில், இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் இவர்களின் வாழ்நிலையை மேலும் மோசமாக்கியுள்ளது. பணவீக்கம்,வேலை இழப்பு,




அடிப்படை வச... ன் பற்றாக்குறை ஆகியவை முன்னாள் போராளிகளின் வாழ்வை மிகவும் கடினமாக்கியுள்ளன. கடுமையான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் அரசின் கண்காணிப்ப வலையமைப்புகள் அவர்களை இன்னொரு புறத்தில் அழிக்கின்றன. இதனால் சிறுநீரகத்தை விற்றல், கடுமையாக உழைத்தல் போன்ற உடல்நலத்தை ஆபத்துக்குள்ளாக்கும் முடிவுகளை எடுக்கப் போராளிகள்தள்ளப்படுகின்றனர்.

தமிழின விடுதலைக்காக தமது வாழ்வு, உடல், கல்வி, பொருளாதாரம் என அனைத்தையும் தியாகம் செய்த போராளிகளின் வாழ்வு அமைதியும் சுபீட்சமும் கொண்டதாக அமைய வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

உண்மையில் இப் பிரச்சினைக்கு தீர்வு காண, தமிழீழத்தில் முழுமையான அரசியல் தீர்வும், உண்மையான மீள்சீரமைப்பு திட்டங்களும் அவசியமாகின்றன. முன்னாள் போராளிகளுக்கு தொழில் பயிற்சி, வேலைவாய்ப்பு, மனநல ஆதரவு, சமூக ஒருங்கிணைப்பு, சர்வதேச பாதுகாப்பு, ஓய்வூதியம் அல்லது உதவுதொகை ஆகியவை வழங்கப்பட வேண்டும் என்பதையும் மேலும், மர்ம மரணங்கள் மற்றும் விச ஊசி குற்றச்சாட்டுகள் குறித்து சுயாதீனமான மற்றும் நம்பகமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம்...” என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தியாக தீபம் அன்னை பூபதியின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தல்

படம் : இணையம்

எதிரியின் ஆக்கிரமிப்பிலிருந்து தமிழீழத்தின் பிள்ளைகளை மீட்பதற்காகா அவர்களின் விடியலுக்காக தன் வயோதிபத்தையும் பொருட்படுத்தாது உணவை மறுத்து தன்னை உருக்கிய தியாத்தின் உறைவிடமே அன்னை பூபதி.

தனது 56ஆவது வயதில் உண்ணாநிலை தியாகத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட அன்னை பூபதி. 3.11.1932 அன்று மட்டக்களப்பில் பிறந்தார்.

1987ஆம் ஆண்டு இந்திய ஒன்றியத்தால் இலங்கைக்குஅனுப்பப்பட்ட இந்திய அமைதிப் படை தமிழ் மக்களை ஒரு மிருகம் போல் வேட்டையாடிக்கொண்டிருந்தது. தமிழீழத்தின் பெண்களை பாலியல் வன்கொடுமை செய்து கொன்று குவித்துக்கொண்டிருந்தது. தமிழர்களைக் காக்க ஆயுதமேந்தி போராடிக்கொண்டிருந்தனர் புலிகள்.

இவ்வாறு விடுதலைப்புலிகளுக்கும்இ இந்திய அமைதிப் படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த நேரத்தில்தான்இ இந்தியப் படைக்கு எதிராக அவர்களின் அடக்குமுறைகளுக்கும் கொடுமைகளுக்கும் எதிராக குரல் கொடுக்கஇ அறப்போராட்டங்களை நடத்த மட்டுஅம்பாறை மாவட்ட அன்னையர் அணி முடிவு செய்தது.

இந்நிலையிலேயே சிங்கள பேரினவாத அரசுக்கெதிராகவும் இந்திய அமைதிப் படைக்கு எதிராகவும் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநிலை போராட்டத்தைத் தொடங்கினாள் அன்னை பூபதி.

உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண வேண்டும்.

இந்த கோரிக்கைகளை முன்வைத்து 19.3.1988ம் ஆண்டு மட்டக்களப்பில் உள்ள பிள்ளையார் சாகும்வரையிலான உண்ணாநிலை போராட்டத்தை அன்னை பூபதி தொடங்கினார்.

இந்திய சிறிலங்கா அரசுகள் அவருடைய கோரிக்கைகளுக்கு செவி கொடுக்க முன்வரவில்லை ! அன்னை பூபதியோ ஒன்றுக்குமே இணங்கி வராதவர்களுக்கு எதிராகப் போராடி தனது உயிரையே கொடுத்தார். அவரது போராட்டம் பல பல கட்டங்களாக தடைகளைச் சந்தித்தது ! ஆயினும் அவர் இறுதி வரை மனம் தளரவில்லை.

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு”

எனும் குறளுக்கேற்ப நன்றாகச் சிந்தித்து பிறகே செயலில் இறங்கியிருக்கிறார் அன்னை பூபதி. இதன் மூலம் போராளிகளுக்குண்டான அவரது மன உறுதியையும் வெளிப்படுத்தியிருக்கிறார். இவ்வாறு தான் கொண்ட கொள்கைக்காக தண்ணீர் மட்டுமே அருந்தி சாகும் வரை உண்ணாநிலை இருந்தார் அன்னை பூபதி.

போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும்இ இந்திய இராணுவம் கைது செய்தது. ஆனாலும் அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

அவர் உண்ணாநிலையைத் தொடங்கி முப்பது நாட்கள் ஆன பின்னும்இ இனப்படுகொலை குற்றவாளிகளால் அவரது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவே இல்லை. சரியாக ஒரு மாதத்தில் அதாவது 19.04.1988 அன்று காலை 8.45 மணிக்கு அவர் உயிர் பிரிந்தது.

அவரது மரணம் பொறி தட்டி சமூக எழுச்சியாக மாறிவிடக் கூடாது என்பதில் இந்திய இராணுவ அதிகாரிகள் கவனமாக இருந்தார்கள். அன்னையின் இறுதி யாத்திரை நேரத்தில் கூட ஊரடங்குச் சட்டமிட்டனர். ஆனால் அதையெல்லாம் உடைத்தெறிந்து அவருடைய இறுதி ஊர்வலத்தில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதை நினைத்தால் இன்றும் ஆச்சரியமே ஏற்படுகிறது !

அன்று நடந்த அன்னை பூபதியின் இறுதி ஊர்வலம் அந்த மண்ணில் நின்ற இந்திய அரசுக்கு சில செய்திகளைக் கூறியது ! ஆமைதியான போராட்டத்தின் அதிர்வலைகள் கண்ணுக்குத் தெரியாமல் பரவிச் செல்பவை ! அவற்றின் சக்தி எந்தப் பலமுள்ள அரசையும் வேரோடு பிடுங்கி வீசிவிடும் சக்தி வாய்ந்தது. ரஸ்யர்களின் பட்டினி நெருப்பு உலகத்தை வெல்லத் துடித்த ஜேர்மனிய நாசிகளையே தூக்கி வீசியது ! காந்தியத்தின் பட்டினி நெருப்பு பிரித்தானிய அரசை இந்திய மண்ணிலிருந்து அகற்றியது ! இவைகள் ரஸ்யாவிலும் இந்தியாவிலும் மட்டுமே நடக்கும் அது தமிழீழத்திற்குப் பொருந்தாது என்று நினைத்தவர்களுக்கு இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியது.

அன்னை பூபதியின் மரணம் சம்பவித்தவுடன் ஏற்பட்ட அதிர்வலைகள் தமிழீழ மக்களை எல்லாம் ஒட்டு மொத்தமாகப் பாதித்தது. இந்திய அரசையும் அதன் எண்ணங்களுக்கு உட்பட்ட தீர்வையும் நிராகரித்து தமிழீழமே இனி எங்கள் தேசம் என்ற உறுதியான எண்ணத்தை மக்கள் மனதில் விதையாக்கியது.

# அமெரிக்க - இஸ்ரேல் - ஈரான்
# நீடிக்கும் போர் பற்றிய பார்வை

**பூமிகன்**

அமெரிக்காவின் போராய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள அண்மைக்கால ஆய்வறிக்கைகளின் படி, ஈரான் மீதான அமெரிக்க மற்றும் இஸ்ரேல் கூட்டுப் படைகளின் 'ஒப ரேஷன் எபிக் பியூரி' (Operation Epic Fury) இராணுவ நடவடிக்கை ஒரு தீர்க்க மான கட்டத்தை எட்டியுள்ளது.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 அன்று தொடங்கப்பட்ட இந்தத் தாக்குதல், ஈரானின் மூலோபாய இராணுவக் கட்ட மைப்புகளைச் சிதைப்பதில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ள அதேவேளை, ஈரானின் அண்மைக்கால அறிவிப்புகள் மற்றும் 'அசிமெட்ரிக்' (Asymmetric) போர் உத்திகள் உலகளாவிய ரீதியில் புதிய பதற்றங்களை உருவாக்கியுள்ளன.

இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க உள வுத்துறைத் தரவுகளின்படி, ஈரானின் ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானக் கட்டமைப்புகள் பாரிய சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதாக கூறப்படுகின்றது. ஈரானிடம் இருந்ததாகக் கருதப்படும் சுமார் 410 முதல் 440 ஏவுகணை ஏவுத ளங்களிலேயே, இதுவரை 260 முதல் 290 தளங்கள் கூட்டுப் படைகளால் அழிக்கப் பட்டுள்ளன அல்லது செயலிழக்கச் செய் யப்பட்டுள்ளன.

இது ஈரானின் ஒட்டுமொத்த தாக் குதல் திறனில் சுமார் 60சதவீதம் முதல் 80சதவீதம் வரையிலான சரிவை ஏற் படுத்தியுள்ளது. குறிப்பாக, மார்ச் 13 மற்றும் 15 ஆம் திகதிகளில் தெஹ்ரான் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள வான் பாதுகாப்புத் தளங்கள் மீது நடத்தப்பட்ட துல்லியமான தாக் குதல்கள், ஈரானின் வான்வெளிப் பாது காப்பை கேள்விக்குறியாக்கியுள்ளன.

இதன் விளைவாக, அண்டை நாடுகள் மற்றும் இஸ்ரேல் மீதான ஈரானின் நேரடி ஏவுகணைத் தாக்கு தல்கள் மார்ச் மாத நடுப்பகுதியில் இருந்து பெருமளவு குறைந்துள்ளதாக இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க உளவுத் துறை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

கூட்டுப் படைகளின் தாக்குதலுக்கு மத்தியில் ஈரான் விடுத்துள்ள அண்மைக் கால அறிவிப்புகள் போர்க்களத்தின் போக்கை மாற்றியமைக்கும் நோக்கம் கொண்டவையாக உள்ளன. ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில், தற் காப்புப் போரில் இருந்து 'முழுமையான ஆக்கிரமிப்புப் போர்' நிலைக்குத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக அறிவித்துள் ளது. குறிப்பாக:

மூலோபாய கடல்வழியான ஹோர்முஸ் நீரிணையை நிரந்தரமாக மூடுவதற்கான அறிவிப்பை ஈரான் வெளியிட்டுள்ளது. உலக எரிசக்தி விநி யோகத்தில் 20சதவீதத்துக்கும் அதிகமா



படம் : இணையம்

னவை இந்தப் பாதையின் ஊடாகவே செல்கின்றன என்பதால், இது உலக எண்ணெய் சந்தையில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப்போரில் 'நிழல் யுத்தம், பதிலாள் அமைப்புகள்' இணைந்துள் ளமை முக்கியமானதாகின்றது. அதா வது, லெபனானின் ஹிஸ்புல்லா மற்றும் ஏமனின் ஹூதி கிளர்ச்சியாளர் களுக்கு 'அனைத்து விதமான அதிநவீன ஆயுதங்களையும்' வழங்கப்போவதாக ஈரான் அறிவித்துள்ளது. இது போரை ஈரான் எல்லைக்குள் மட்டும் மட்டுப்ப டுத்தாமல், மத்திய கிழக்கு முழுவதும் பரப்பும் ஒரு உத்தியாகப் பார்க்கப்ப டுகிறது.

அதேபோன்று ஈரானின் அணுசக்தி அச்சுறுத்தல் தொடர்கின்றது. தனது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற் படும் பட்சத்தில், தனது அணுசக்தி கொள்கையை மறுபரிசீலனை செய்ய நேரிமென ஈரான் எச்சரித்துள்ளது.

இவ்விதமான நிலைமைகளில் இரா ணுவச் சரிவுகளுக்கு அப்பால், ஈரானின் அதிகார மையத்திற்குள் நிலவும் குழப் பங்களை இஸ்ரேலிய மற்றும் அமெ ரிக்க உளவுத்துறை அறிக்கை வெளிச்ச மிட்டுக் காட்டுகிறது.

ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி மார்ச் தொடக்கத்தில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் செய் திகள், ஈரானிய இராணுவத்திற்குள் பெரும் மனச்சோர்வை ஏற்படுத்தியுள் ளது. தற்போது அவரது மகன் மொஜ் தபா கமேனி தலைமையேற்றுள்ளதாகத் தெரிந்தாலும், அவர் காயமடைந்துள் ளதால் ஈரானிய புரட்சிகர காவற்ப டையே முழுமையான போர் முடிவு களை எடுக்கிறது.

இதனால், தொழில்முறை இராணு வமான இஸ்லாமிய குடியரசு ஈரானிய இராணுவத்துக்கும், தீவிரவாதப் போக் குடைய ஈரானிய புரட்சிகர காவற் படை அமைப்பிற்கும் இடையே அதி காரப்போட்டி தீவிரமடைந்து வருவது அமெரிக்க, இஸ்ரேலிய கூட்டுப் படை களுக்குச் சாதகமான அம்சமாகக் கருதப் படுகிறது.

இதேநேரம், இந்த மோதலால் வளை குடா நாடுகளின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது நடத்தப்பட்ட ஏவு கணைத் தாக்குதல்கள் உலக எண்ணெய் விலையை ஒரு பீப்பாய்க்கு 100 டொல ருக்கும் மேல் அதிகரிக்கச் செய்துள்ளது.

இருப்பினும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் ஒருங்கிணைந்த 'ஏஜிஸ்' மற்றும் 'அயன் டோம்' வான் பாது காப்பு அமைப்புகள் ஈரானின் ஆயிரக்க ணக்கான ட்ரோன்களை வெற்றிகரமாக இடைமறித்துள்ளன.

உதாரணமாக, சவூதி அரேபியா மற்றும் நேட்டோ படைகள் தமது வான் எல்லைக்குள் நுழைய முயன்ற ஏவுக ணைகளைத் தடுத்து நிறுத்தி, பிராந்திய ஸ்திரத்தன்மையைப் பேண முயன்று வருகின்றன.

அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய கூட்டுப் படைகளின் தரைப்படை முன்னேற்றம் ஈரானின் எல்லைப் பகு திகளில் தீவிரம் பெற்றுள்ளது. குறிப் பாக, குசஸ்தான் மாகாணத்தில் உள்ள ஈரானின் எண்ணெய் வயல்களைக் கைப்பற்றும் நோக்கில் நடத்தப்படும் 'ஒபரேஷன் எபிக் பியூரி' (Operation Epic Fury) நடவடிக்கையின் இரண்டாம் கட்டம், ஈரானின் பொருளாதார நரம்பு மண்டலத்தைத் துண்டிப்பதை நோக்க மாகக் கொண்டுள்ளது.

இதற்குப் பதிலடியாக ஈரான் தனது 'தன்னார்வத் தற்கொலைப் படைகளை' முன்னிலைப்படுத்தியுள்ளதுடன், நிலத் தடி பதுங்கு குழிகளில் இருந்து நீண்ட தூர ஏவுகணைகளை ஏவும் புதிய உத் தியைக் கையாண்டு வருகிறது. இது நவீன செய்மதி கண்காணிப்புகளையும் தாண்டி தாக்குதல் நடத்தும் திறன் கொண்டதாக உள்ளது.

இவற்றுக்கும் மேலாக, ஈரானின் சைபர் தாக்குதல் பிரிவுகள் மேற்கத்திய நாடுகளின் நிதி மற்றும் மின்சாரக் கட்ட மைப்புகள் மீது பாரிய ஊடுருவல்களை மேற்கொண்டு வருகின்றன. இதுவொரு 'டிஜிட்டல் போர் முனையை' போர்க்க ளத்தில் உருவாக்கியுள்ளது.

ஈரானின் அண்மைக்கால அறிவிப் புகளின் படி, அவர்கள் ரஷ்யா மற்றும் சீனாவிடமிருந்து இரகசியமாகப் பெற் றுக்கொண்ட இலத்திரனியல் போர் முறை கருவிகளைப் பயன்படுத்தி, அமெரிக்க ட்ரோன்களின் சமிக்ஞை களைத் துண்டிக்கும் முயற்சியிலும் ஈடு பட்டுள்ளனர்.

இந்தப் போர் தற்போது ஈரானின் எல் லைகளைக் கடந்து ஒரு பிராந்திய மோத லாக உருவெடுத்துள்ளது. ஈரானின் அறி விப்பைத் தொடர்ந்து, சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள ஈரான் ஆதரவு குழுக்கள் அமெரிக்கத் தளம் மீது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளன.

இதற்குப் பதிலடியாக அமெரிக்கா தனது ஆறாவது கடற்படைப் பிரிவை மத்திய தரைக்கடல் பகுதியில் நிலை நிறுத்தியுள்ளது. ஐரோப்பிய நாடுகள் இந்த மோதலில் மனிதாபிமான அடிப்ப டையில் தலையிட முயன்றாலும், இஸ் ரேலின் பாதுகாப்பு மற்றும் ஈரானின் அணுசக்தி அச்சுறுத்தல் ஆகியவற்றுக்கு இடையே ஒரு சமநிலையைக் காண முடியாமல் தடுமாறி வருகின்றன.

சீனாவின் மத்தியஸ்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ள நிலையில், பிராந் திய நாடுகள் தமக்கான புதிய பாதுகாப்பு கூட்டணிகளை உருவாக்கி வருகின்றன. இது இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான உலகளாவிய ஒழுங்கில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவ ரீதியாக அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானின் முதுகெலும்பைச் சிதைத்துள்ளதாக மார்பு தட்டிக்கொள் கின்றன. இருப்பினும், ஈரானிடம் எஞ்சி யுள்ள 150 க்கும் மேற்பட்ட ஏவுகணைத் தளங்கள் மற்றும் ஈரானின் மறைமுகப் போர் முறைகளை மிகத் தீவிரமாக பயன்படுத்தும் நிலைமையே காணப்ப டுகின்றது.

அந்நிலைமையானது. இன்னும் பாரிய அச்சுறுத்தலாகவே உள்ளன. ஈரானின் அண்மைக்கால அறிவிப்பு களில் வெளிப்படுவது போல, அவர்கள் நீண்டகாலப் போருக்குத் தயாராகி வரு கின்றனர்.

எஞ்சியுள்ள இராணுவக் கட்ட மைப்புகளை அழித்து, பிராந்தியத்தில் நிரந்தர அமைதியை நிலைநாட்ட இன்னும் கூடுதல் காலம் தேவைப்படும் அதுவரையில் போரின் நிலைமைகள் நாளுக்கு நாள் தீவிரமடையத்தான் போகின்றது.

















நமது ஈழநாடு வாழ்வாதார உதவிக்கர திடடத்தில் இம்முறை 30 குடுமபங்களிற்கு உவித்திடங்கள்கள் வழங்கிவைக்கப்பட்டன. மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவித்திடடம் தேவைப்படும் தேர்தெடுக்கபட்ட மாவீரர் மற்றும் முன்னாள் போராளிகள் குடும்பங்களிற்கு வழங்கப்படும் இந்த வாழ்வாதர உதவித்திட்டத்தில் இம்முறை செயற்பாட்டாளர் அருளையா திவாகர் என்பவரின் நிதிப்பங்காளிப்பில் மட்டக்களப்பு வாழைச்சேனைவினாயகபுரம் கிராமத்தைச்சேர்ந்த 10 குடும்பங்களுக்கும் செயற்பாட்டாளர் குணசுந்தரம் கோபிநாத் என்பவரின் நிதிப்பங்காளிப்பில் மட்டக்களப்பு பேத்தாழை கிராமத்தை சொ்ந்த 20 குடும்பங்களுக்கும் அத்தியவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டது.







